முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி.

அ.சா. 1 தேதி.19.11.2024

| SC. No. | 24/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | மணிவேலன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்).

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பந்தம் என்பவர் எனக்கு பெரியப்பா முறையாகும். கல்யாணசுந்தரம் என்பவர் எனக்கு மாமா முறையாகும், அவர் இறந்துவிட்டார். நான் காவல் புகார் யார் எழுதியது என்று எனக்கு தெரியாது. எனக்கு அடிப்பட்டவுடன் மயக்கம் வந்துவிட்டது. மீண்டும் 6 நாட்கள் கழித்து தான் மயக்கம் தெளிந்தது. என்னுடைய உடையில் இரத்த கரை எதுவும் படவில்லை. மருத்துவரிடம் யார் விபரம் கூறியது என்று எனக்கு தெரியாது. நான் மயக்கத்தில் இருந்தேன். என்னை தாக்கியதாக கூறிய கட்டை மற்றும் கல்லையும் எதிரிகள் எடுத்து சென்றுவிட்டார்கள். மயிலாடுதுறையில் உள்ள அருண்பிரியா என்ற தனியார் மருத்துவ மனைக்கு என்னை சிகிச்சைக்காக எனது அம்மா அழைத்து சென்றார். அம்மா மருத்துவரிடம் எனது காயம் பற்றி என்ன கூறினார் என்று எனக்கு தெரியாது. கும்பகோணம், சுகம் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அம்மா தான் அழைத்து சென்றார். எனது ஊருக்கும், மயிலாடுதுறை காவல் நிலையத்திற்கும் சுமார் 5 கி.மி இருக்கும். இருசக்கர வாகனத்தில் இருந்து மயிலாடுதுறை காவல் நிலையத்திற்கு சுமார் 20 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக 6 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அடிப்பட்ட பிறகு எந்த எந்த மருத்துவ மனைக்கு என்னை அழைத்து சென்றார்கள் என்றும், என்ன எ ன்ன சிகிச்சை செய்தார்கள் என்று எனக்கு 6 நாட்கள் வரை தெரியாது என்றால் சரிதான், அதன் பிறகு எனது அம்மா விபரம் கூற தெரிந்து கொண்டேன். போலீஸ் விசாரணையில் எனக்கு தலையில்

காயம்ப்பட்டதை கூறினேன். 2ஆம் எதிரி இத்தோடு செத்துபோடா என்று கூறியதாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சத்தம் கேட்டு ஊர்காரர்களான கமல்ராஜ், மதியழகன் மற்றும் சிலர் ஓடி வந்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் மேல் சிகிச்சைக்காக பாண்டிசேடி ஜிப்மர் மருத்துவ மனையில் சேர்ந்துள்ளதாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். 1ஆம் எதிரியின் தங்கையை நான் காதலிப்பதாக கூறி அவர் மறுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல, மறுக்கவில்லை இருவரும் காதலித்து கொண்டு தான் இருந்தோம். அவர் தற்போது திருமணம் ஆகி அவருடைய கணவர் வீட்டில் இருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ஆம் எதிரியின் தங்கையை நான் காதலிப்பதாக கூறி அவரை நடு ரோட்டில் தாக்கினேன் என்றால் சரியல்ல. நான் அது போல் தகராறு செய்ததால் அங்கிருந்த ஊர்காரர்கள் தடுத்து நிருத்தினார்கள் என்றால் சரியல்ல. அதுபோல் ஊர்காரர்கள் தடுத்த போது தான் நான் தவறி விழுந்தது எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, அவர்கள் தான் அடித்தார்கள். 2ஆம் எதிரிக்கு நான் பைனாஸில் இருந்து பணம் வாங்கி கொடுத்தேன் என்று போலீசார் சொல்லி கொடுத்தது போல் வழக்கிற்காக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியது போல எதிரிகள் என்னை திட்டவில்லை என்றாலும், அடிக்கவில்லை என்றாலும், கொலை செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.